දුරකථන ) 0112669192 , 0112675011
தொலைபேசி ) 0112698507 , 0112694033
Telephone ) 0112675449 , 0112675280

ෆැක්ස් ) 0112693866
பெக்ஸ் ) 0112693869
Fax ) 0112692913

විද්‍යුත් තැපැල )
மின்னஞ்சல் முகவரி ) postmaster@health.gov.lk
e-mail )

වෙබ් අඩවිය )
இணையத்தளம் ) www.health.gov.lk
website )

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

සෞඛ්‍ය අමාත්‍යාංශය
சுகாதார அமைச்சு
Ministry of Health

මගේ අංකය )
எனது இல ) CF/EXW/10/2024
My No. )

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

දිනය )
திகதி ) 2024/03/26
Date )

பொது சுற்று நிருபக் கடித இலக்கம் :- 02 – 53/2024

மாகாண சுகாதார செயலாளர்கள்,
பிரதிப் பணிப்பாளர் நாயகம் - இலங்கைத் தேசிய வைத்தியசாலை
மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்கள்,
மத்திய அரசின் கீழ் நிர்வகிக்கப்படும் சகல வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள்,
மற்றும் நிறுவனங்களின் தலைவர்கள் அனைவருக்கும்,
பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்.
பன்முகப்படுத்தப்பட்ட பிரிவுகளின் தலைவர்கள்.

**இலங்கை பொறியியலாளர் சேவை தரம் III இனைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான முதலாவது திணைக்களப் பரீட்சை - 2024 (முதலாவது தடவை)**

இலங்கை பொறியியலாளர் சேவை தரம் III இனைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் தமது முதலாவது நியமனத் திகதியில் இருந்து மூன்று வருடங்கள் பூர்த்தியடைவதற்கு முன் சித்தியடைந்திருக்க வேண்டிய திணைக்களப்பரீட்சை **2024/05/19** சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளின் மூலம் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகிறது. பரீட்சை நடாத்தப்படும் இடம், நேரம் என்பன பரீட்சை அனுமதி அட்டையில் குறிப்பிடப்படும்.

**02. தகைமைகள்:-**

அரசாங்க நிருவாக சுற்றுநிருபம் 06/2006 (**SL -01 -2006**) இனது புதிய ஆட்சேர்ப்புத்திட்டத்திற்கு அமைவாக பொறியியலாளர் சேவையின் தரம் III உரித்தான இதுவரையும் பரீட்சையினை பூர்த்திசெய்யாத உத்தியோகத்தர்கள் மாத்திரம் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும.

**03. விண்ணப்பங்கள்:**

இச் சுற்று நிருபத்தின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் தங்களினுடைய திணைக்களத் தலைவரின் ஊடாக பணிப்பாளர் (பரீட்சைகள்), சுகாதார அமைச்சு, “சுவசிரிபாய” , இலக்கம் - 385, வணக்கத்திற்குரிய பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு - 10 என்னும் முகவரிக்கு **2024/04/15** ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். **"கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பரீட்சையின் பெயர் இலங்கை பொறியியலாளர் சேவை தரம் III சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை – 2024 (முதலாவது தடவை)" எனக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப் பத்திரத்தில் கொடுக்கப்பட்டுள்ள அனைத்து தகவல்களும் சரியானவை என திணைக்கள தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டு இருக்க வேண்டும்.** தங்களது விண்ணப்பப் பத்திரத்துடன் விண்ணப்பதாரியின் முகவரியிடப்பட்ட ரூபா. 110 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட (“9x4”) கடித உறைகள் 01 இனையும் (இதில் விண்ணப்பதாரி தனது சொந்த முகவரியினையோ,அல்லது அலுவலக முகவரியினையோ குறிப்பிடலாம்) இணைத்து அனுப்பி வைக்க வேண்டுமவிண்ணப்ப முடிவுத்திகதிக்கு **பின்னராக கிடைக்கும் விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிப்படும்.**

கவனிக்குக:- விண்ணப்பமானது A4 தாளின் இருபக்கங்களினையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட வேண்டும். முதலாவது பக்கத்தில் 01 - 04 வரையான விபரங்களும், இரண்டாவது பக்கத்தில் 05 - 08 வரையான விபரங்களும் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்படி தகவல்களுக்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தல்களும் இன்றி நிராகரிக்கப்படும்.

04. பரீட்சைக் கட்டணம்:

1. பரீட்சைக்கு முதன் முறையாக தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சைகள் கட்டணத்திலிருந்து விதிவிலக்கப்படுவர். மறு முறைகளில் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சைக் கட்டணத்தி லிருந்து விதிவிலக்கப்படுவர். மறு முறைகளில் தோற்றும் விண்ணப்பதாரர்கள் ஒரு பாடத்திற்கு ரூபா. 25.00 பெறுமதியான முத்திரைகளை விண்ணப்பத்தில் ஒட்டி மேல் தனது கையொப்பத்தையும் திகதியும் இட்டு அவைகளை உரிய முறையில் மதிப்பு நீக்கம் செய்தல் வேண்டும்.

2. எக்காரணத்தைக் கொண்டும் இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் வேறு பரீட்சையொன்றுக்கு மாற்றப்படவோ அல்லது மீளச் செலுத்தப்படவோ மாட்டாது.

05. பரீட்சைக்கான அனுமதி:-

(அ) ஏற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் பொருட்டு விண்ணப்பதாரர்களுக்கு அனுமதிப்பத் திரங்கள் வழங்கப்படும். அவ்வனுமதிப் பத்திரங்களை உரிய முறையில் பூரணப்படுத்தி பரீட்சை நிலைய அதிபருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறின்றி பரீட்சைக்கு தோற்ற இடமளிக்கப்படமாட்டாது.

(ஆ) பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையத்தினுள் பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் தமது ஆள் அடையாளத்தினை நிரூபித்தல் வேண்டும். அதற்காகக் கீழே குறிப்பிடப்படும் ஆவணங்களுள் ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

- (அ) தேசிய அடையாள அட்டை
- (ஆ) சுகாதார அமைச்சு மற்றும் அதனுடன் ஏற்புடைய நிறுவனங்களினால் முறைப்படி வழங்கப்பட்ட அடையாள அட்டை
- (இ) வலுவுள்ள சாரதி அனுமதிப் பத்திரம்
- (ஈ) வலுவுள்ள கடவுச் சீட்டு

06. பரீட்சைத்திட்டம்:-

(அ) **திணைக்கள விதிகள்:**
இப்பரீட்சை இலங்கை பொறியியலாளர் சேவையுடன் தொடர்புடைய திணைக்கள மற்றும் நிறுவன நடைமுறை விதிகள் தொடர்பான அறிவினை பரிசோதிக்கும் வகையிலான 03 மணித்தியாலங்களைக் கொண்ட கட்டுரை வினாப்பத்திரத்தினைக் கொண்டது. அதில் 05 துறைகளுடன் தொர்புடைய 10 வினாக்கள் காணப்படுவதுடன் ஒவ்வொரு துறைசார்ந்தும் குறைந்தது ஒவ்வொரு வினா அடங்கலாக மொத்தமாக 5 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். அதற்கு 100 புள்ளிகள் வழங்கப்படும். சித்தியடைவதற்காக குறைந்தது 40 புள்ளிகள் பெறப்பட வேண்டும்.

07. பரீட்சை பாடத்திட்டம்:-

7.1 களஞ்சிய முகமைத்துவம்

(i) களஞ்சிய கணக்கெடுப்பு

(ii) சேதம் மற்றும் இழப்புகள் தொடர்பான அறிக்கை

(iii) ஒதுக்கீட்டு கணக்கு

(iv) வங்கிக் கணக்கிணக்கக் கூற்று

(v) காசுப் புத்தகம்

(vi) செலவு ஏடு

(vii) நிதி அதிகாரங்களை கையளித்தல்

7.2 திட்ட மதிப்பீடுகள்

(i) செலவுத் தலைப்புகள்

(ii) தயாரித்தல், பரிசோதித்தல், அங்கீகரித்தல்

(iii) ஒப்புதல் அளிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு கூடுதல் நிதி பெறுதல்

(iv) மதிப்பீடுகளை திருத்துதல்

(v) ஒப்புதல் அளிக்கப்பட்ட மதிப்பீடுகளின் அளவு மற்றும் விலைகளில் மாற்றம் செய்தல்

(vi) கொடுப்பணவு செய்தல்

7.3 கேள்விப்பத்திர திட்டம்

(i) வெவ்வேறு மட்டங்களினது கேள்விப்பத்திர சபை, கேள்விப்பத்திர சபை அமைப்பு மற்றும் கேள்விப்பத்திரம் கோரல், கேள்விப்பத்திரம் வழங்கல் மற்றும் ஒப்பந்தங்கள் செய்வதற்கான செயல் முறைகளும்

(ii) கேள்விப் பத்திர நடைமுறைத்திட்டங்களுக்கு அப்பால் செயற்படுவதற்கான அதிகாரம்

(iii) அங்கீகரிக்கப்பட்ட அமைப்புகளுடன் ஒப்பந்தங்கள் செய்தல்

(iv) ஒப்பந்தங்களை வழங்குதல், மேற்பார்வை செய்தல் மற்றும் துணை ஒப்பந்தங்கள்

(v) மேன் முறையீடு மற்றும் ஒப்பந்த மேலதிக கொடுப்பனவு

(vi) இழப்பு மற்றும் காலதாமத கட்டணங்களை அறவிடல்

(vii) இறுதிக் கொடுப்பணவை உறுதிப்படுத்தல் மற்றும் பராமரிப்பு காலம்

(viii) ஒப்பந்த கரை நிரற் பட்டியல்

(ix) டென்டர் மற்றும் காப்புப் பிணை

(x) ஒப்பந்தத்தை இரத்துச் செய்தல்

7.4 ஒப்பந்த அடிப்படையில் அமைக்கும் கட்டிடங்களை மேற்பார்வை செய்தல்

(i) கொள்வனவு செய்தல்

(ii) தரக் கட்டுப்பாடு

(iii) நிகழ்ச்சி நிரல் தயாரித்தல்

(iv) கண்காணிப்பு (Progress Control)

(v) ஒப்பந்தக்காரரின் பொறுப்பும் கடமைகளை பூர்த்தி செய்தலும்

(vi) ஒப்பந்தக்காரரின் கொடுப்பனவு அறிக்கையை சான்றுப்படுத்தல்

7.5 வாகனக் கொள்வனவு மற்றும் பராமரிப்பு

(i) வாகன மற்றும் உதிரிப் பாகங்கள் கொள்வனவு, திருத்தியமைப்பதற்கான அதிகார வரம்பு

(ii) ஒப்பந்த அடிப்படையில் வாகனங்களை நிறுவுதலும் மேற்பார்வை செய்தலும்

08. பரீட்சை தொடர்பான ஒழுங்குவிதிகளைக் கடைப்பிடித்தல்.

பரீட்சார்த்திகள் குறிப்புக்களை தன்னிடத்தில் வைத்து பார்த்து எழுதுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய பரீட்சார்த்திகளின் விடைத்தாளினை பார்த்து எழுதுதலும் தடை செய்யப்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் உதவி செய்தலை தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். மேலும் கையடக்கத் தொலைபேசி மற்றும் அதனுடன் தொடர்புடைய தொடர்பாடல், இலத்திரணியல் உபகரணங்களை பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். இவ்விதிகளை மீறும் எந்தவொரு பரீட்சார்த்திமீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

09. தயவு செய்து இச்சுற்று நிருபக் கடிதத்தில் உள்ளவற்றை உங்கள் பிரிவில் / விசேட இயக்கத்தில் நிறுவனத்தில் கடமைபுரியும் உரிய உத்தியோகர்களுக்கு அறிவிக்கவும். இந்த தகவல்களை www.health.gov.lk என்னும் இணையத்தளத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

**கவனிக்கவும் : - சிங்களம், தமிழ், ஆங்கில சுற்று நிருபங்களில் ஏதாவது வேறுபாடுகள் காணப்படுமிடத்து சிங்கள மொழயிலான சுற்று நிருபமே வலுவுடையதாகும்.**

ஷாமிக எச் கமகே
பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்) II
செயலாளருக்காக,

Chamika S. Gamage
Deputy Director General (Administration) II
Ministry of Health
"Suwasiripaya"
Colombo 10.

**EXW** SLES Gr. III

அலுவலகப் பிரயோகத்தின் பொருட்டு

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

**இலங்கை பொறியியலாளர் சேவை தரம் III இனைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான முதலாவது திணைக்களப் பரீட்சை - 2024 (முதலாவது தடவை)**

01 (அ) (i) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (சிங்களத்தில் / தமிழில் எழுதவும்) : ..............................

..............................................................................................................

(ii) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் ( ஆங்கில கப்பிற்றல் எழுத்துக்களில் எழுதவும்) :

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |

(iii) முதல் எழுத்துக்களுடன் பெயர் : (சிங்களத்தில்) / தமிழில்): ..............................

..............................................................................................................

(iv) முதல் எழுத்துக்களுடன் பெயர் : (ஆங்கில கப்பிற்றல் எழுத்துக்களில்)

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |

(ஆ) (i) தரம் III ற்கு நியமிக்கப்பட்ட / உயர்வு பெற்ற கடித இல: ..............................

(ii) தரம் III ற்கு நியமிக்கப்பட்ட / உயர்வு பெற்ற திகதி: ..............................

(iii) தற்போது பெறும் வருடாந்த வேதனம் : ..............................

(iv) கையடக்கத் தொலைபேசி இல : | | | | | | | | | | |

(v) தேசிய அடையாள அட்டை இல: | | | | | | | | | | | | |

(vi) மின்னஞ்சல் முகவரி : ..............................

02 (அ) தற்போது சேவை புரியும் நிறுவனம்:

(சிங்களத்தில்)..............................

(தமிழில்) ..............................

(ஆ) இந்த நிறுவனம் நிர்வகிக்கப்படுவது - மத்திய அரசினால் ☐

- மாகாணசபையினால் ☐

(இ) மாகாண சபையாயின் அதனைக் குறிப்பிடவும்..............................

(ஈ) அதற்குரிய மாவட்டம் : ..............................

(உ) பரீட்சை அனுமதி அட்டை அனுப்புவதன் பொருட்டு தெளிவாக விண்ணப்பதாரியினது முகவரியிடப்பட்ட 9" x 4" அளவு ரூபா 110.00 பெறுமதியுடைய முத்திரை இடப்பட்ட கடித உறை 01 இணைக்கப்பட்டு உள்ளதா? ..............................

(ஊ) (i) தபால் முகவரி (சிங்களத்தில்): ..............................

..............................................................................................................

(ii) தபால் முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்): ..............................

..............................................................................................................

03 பரீட்சைக்கு தோற்றவுள்ள மொழி (சிங்களம் /தமிழ் /ஆங்கிலம்): ..............................

04 (அ) இதற்கு முன்னர் பரீட்சைக்குத் தோற்றியுள்ளீரா? ..............................

(ஆ) அவ்வாறு தோற்றியிருந்தால் இந்த தடவை முத்திரை ஒட்டப்பட்டுள்ளதா? ..............................

| முத்திரைக் கூண்டு |
|---|

05. விண்ணப்பதாரியின் உறுதியுரை

(i) இவ்விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என்றும் இப் பரீட்சைக்கு நான் முதற் தடவையாக தோற்றுவதனால் பரீட்சைக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை என்றும் /முதற் தடவை அல்லாதபடியால் ரூபா................ பெறுமதியுடைய முத்திரை ஒட்டியுள்ளதாகவும் இம் முத்திரையானது விண்ணப்பப்படிவத்தில் ஒட்டி இரத்துச் செய்வதற்கு முன்னர் பாவிக்கப்படாத பெறுமதியுடைய முத்திரையெனவும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

(ii) சுகாதார அமைச்சு பரீட்சைகள் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு அமைய செயற்படுவேன் என்றும், இப் பரீட்சை தொடர்பான பிரமாணங்களுக்கு அமையநான் தகைமையற்றவனாக காணப்பட்டால் எனதுபரீட்சார்த்தித் தன்மையினை இரத்துச் செய்தவற்கும் இது தொடர்பாக எடுக்கப்படும் எந்ததீர்மானத்திற்கும் இணங்குவேன் என்றும் இத்தால் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

திகதி :............................ ........................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

06. தனிநபர் கோவையினை கையாளும் விடய முகாமைத்துவ உதவியாளரின் உறுதியுரை

இவ் விண்ணப்பமானது விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் என்னிடம் பாரமளிக்கப்பட்டது என்றும், சுயவிபரக் கோவையில் உள்ள தகவல்களின் அடிப்படையில் சரியாக பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்றும், தரம் III பதவிக்கான முதலாவது வினைத்திறைமை காண் தடைப்பரீட்சை- இவ்விண்ணப்பப் பத்திரத்தின் பிரதி ஒன்று சுயவிபரக் கோவையில் கோவையிடப்பட்டுள்ளது என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி : :............................ ............................................

பெயர், கையொப்பம்

07. நிறுவனத் தலைவரின் கையொப்பம்

திரு/திருமதி/செல்வி/செல்வன் ............................................ என்பவரினை நான் நன்கு அறிவேன் என்றும் இவர் இப் பரீட்சைக்குத் தோற்றுவது முதற் தடவை ஆனபடியால் முத்திரை ஒட்ட தேவையில்லை என்றும் / முதற்தடவை அல்லாத படியால் ரூபா.......... முத்திரை ஒட்டப்பட்டுள்ளது என்றும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் இரவருடைய சுயவிபரக் கோவைக்கு அமைவாக சரியானவை என்றும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரிய தகைமைகளினை இவர் பூத்திசெய்துள்ளார் என்றும் என் முன்னிலையில் தனது கையொப்பத்தினை இட்டார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி:.............................. .......................................

திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(இறப்பர் முத்திரை இடப்படவேண்டும்)

08. பன்முகப்படுத்தப்பட்ட பிரிவு / விசேட இயக்கத் தலைவரின் உறுதிப்படுத்தல்.

திரு/திருமதி/செல்வி/செல்வன் ........................................... என்பவர் எனது நிறுவனத்தில் ...................................... உத்தியோகத்தராக பணியாற்றுகின்றார் என்றும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் விண்ணப்பதாரியின் சுயவிபரக் கோவைக்கு அமைய சரியானவையென்றும், இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரிய தகைமைகளினை இவர் பூத்திசெய்துள்ளார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி:............................... .......................................

பன்முகப்படுத்தப்பட்டபிரிவு/விசேட இயக்கத் தலைவரின் கையொப்பம்
(இறப்பர் முத்திரை இடப்படவேண்டும்)

*தேவையற்ற இடங்களை கீறி விடவும்*